

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (2.5.2026) அவரது இல்லத்தில், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி சந்தித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் நேற்று முன்தினம் (2.5.2026), சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், 2026–2027ஆம் ஆண்டு 12ஆம் வகுப்பு முடித்து கல்லூரிகளில் முதலாமாண்டு சேரவிருக்கும் மாணவர்களுக்கு உதவிடும் வகையில், தி.மு.க. மாணவர் அணியின் சார்பில் உருவாக்கப்பட்ட ”TSC HELP DESK”னை தொடங்கி வைத்தார். அதுபோது கழக துணைப் பொதுச்செயலாளர்கள் ஆ.இராசா,எம்.பி., அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் – அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கழக மாணவர் அணிச் செயலாளர் திருமதி வீரமணி, துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், வி.ஜி.கோகுல் மாவட்ட அமைப்பாளர்கள் சென்னை தென்மேற்கு விஜய், சரவணன், சத்யா மற்றும் 50க்கும் மேற்பட்ட தமிழ் மாணவர் மன்ற நிர்வாகிகள் உடனிருந்தனர்.



கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி திருக்கோவிலூர் தொகுதி அரகண்டநல்லூரில் உள்ள ஓம் சக்தி மினி ஹாலில் கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ, அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் தலைமையில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளரும் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளருமான டாக்டர் பொன்.கௌதமசிகாமணி முன்னிலையில் காணொலி வாயிலாக வாக்கு எண்ணும் முகவர்கள் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் விக்கிரவாண்டி சட்டமன்ற வேட்பாளர் அன்னியூர் அ.சிவா மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ம. ஜெயச்சந்திரன் மாநில பிரச்சார குழு செயலாளர் தேன்மொழி மற்றும் மாவட்ட நிர்வாகிகள், நகர, பேரூர் மற்றும் ஒன்றிய கழக செயலாளர்கள், தலைவர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமை முகவர்கள், முகவர்கள் அனைவரும் இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர்.

### ஓட்டல் உணவுகளின் விலை உயர்வால் கட்டுமானத் தொழிலாளர்கள் பாதிப்பு!

# கேஸ் சிலிண்டர் விலை உயர்வை திரும்பப் பெற வேண்டும்!

## விவசாயிகள்–தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கோரிக்கை!

சென்னை, மே 4 -

விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

வணிக கேஸ் சிலிண்டர்களின் விலை ரூபாய் 990.50 உயர்த்தப்பட்டுள்ளது விலைவாசி உயர்விற்கு வழிகோலும். குறிப்பாக ஓட்டல் தொழில் நசிவடையும், உணவு பண்டங்களின் விலைக் கடுமையாக ஏறும். இதனால் தொழிலாளர்கள் மிகப்பெரிய இன்னல்களுக்கு ஆளாவார்கள். இந்த செயல் வன்மையானக் கண்டனத்திற்குரியதாகும்.

ஐந்து மாநில சட்டப்பேரவை தேர்தல் முடியும் வரை கள்ள மனம் காத்த மோடி அரசு தேர்தல் முடிந்தவுடன் ஒரே அடியாக சிலிண்டர் விலையை 990 ரூபாய் அளவிற்கு உயர்த்திருக்கிறது. ஏற்கனவே 2246 ரூபாய் விற்ற சிலிண்டர் விலை தற்போது 3237 ரூபாயாக விலை உயரும். விலை உயர்வு ஒரு பக்கம். இன்னொரு பக்கம் சிலிண்டர் தட்டுப்பாடு. இதனால் வணிகர்கள் கள்ள சந்தையில் சிலிண்டர் வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். ஏற்கனவே கள்ள சந்தையில் ரூபாய் 6 ஆயிரம் வரை விலைக் கொடுத்து வாங்க வேண்டிய நிலையில், தற்போது இது இரண்டு மடங்காக உயரும். இதனால் அனைத்து விலைவாசிகளும் உயர்வதற்கு வாய்ப்பாகிவிடும். குறிப்பாக தேநீர் கடை, ஓட்டல் போன்ற உணவு நிறுவனங்களின் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் விலை அபரீதமாக உயரும் அபாயம் உள்ளது.



கட்டுமானத் தொழிலாளர்கள் போன்ற கோடிக்கணக்கான அமைப்புசாராத் தொழிலாளர்கள் தேநீரையும், மதிய உணவிற்கு ஓட்டல்களையும் நம்பி உள்ளவர்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாவார்கள். உணவு நிறுவனங்கள் மூடக்கூடிய பேராபத்து ஏற்படும். தொழிலாளர்கள் வேலை இழக்கக் கூடிய அபாயம் நேரும். இவற்றையெல்லாம் கொஞ்சம் கூட சிந்திக்காத மோடி அரசு மேற்காசிய போரை காரணம் காட்டி விலையை உயர்த்திருப்பது மிகுந்த கண்டனத்திற்குரியதாகும். இந்த நிலையில் விரைவில் பெட்ரோல், டீசல் விலையும் உயர்த்தப்படும் பேராபத்து நிலவி வருகிறது. இதனால் ஒட்டுமொத்த பொருளாதாரம் பாதிக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே உணவு நிறுவனங்கள், அதில் பணியாற்றும் தொழிலாளர்கள், தேநீர் மற்றும் ஓட்டல் உணவுகளை மட்டுமே நம்பி உள்ள கோடிக்கணக்கானத் தொழிலாளர் போன்றவர்களை கருத்தில் கொண்டு ஏற்றப்பட்ட விலையை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என ஒன்றிய அரசை விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு பொன்குமார் தெரிவித்துள்ளார்.

